### உடற்கல்வி ஆசிரியரின் விடாமுயற்சி

# சாதிக்க தயாராகும் கிராமத்து வீராங்கனைகள்

● கே.சேவியர்

நெல்லை, மே 23-

விளம்பர மோகத்தால் டிவியில் பார்ப்பதையெல்லாம் அப்படியே வாங்கி சாப்பிட்டு உடல் பருத்து இளம் வயதிலேயே நோய் தொற்றுக்கு ஆளாகும் பள்ளி மாணவர்களிடமிருந்து சற்று வித்தியாசமாகத் தெரிகிறார்கள் அந்த மாணவர்கள்.

நெல்லை மாவட்டம் தாழையூத்து அருகே உள்ளது நாரணம்மாள்புரம் கிராமம். இங்கு திரு இருதய சகோதரர் சபையின் மூலம் செயின்ட் ஜோசப் உயர்நிலைப்பள்ளி நடத்தப்பட்டுவருகிறது. இங்கு உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றி வருபவர் சுந்தரமூர்த்தி. இவரது தொடர் முயற்சியால் கடந்த 2008-2009 கல்வியாண்டில் 6 மாணவிகள் உலக திறனாய்வு திட்டத்தின் கீழ் தடகள போட்டிகளில் 100 மீட்டர், 200மீட்டர், 400 மீட்டர் ஓட்டங்களில் சாதனை படைத்தனர்.



சென்னை மாரத்தான் போட்டியில் 6வது இடத்தைப்பிடித்த சலவைத்தொழிலாளி மகள் சுப்புலெஷ்மி.



பாளை அண்ணா விளையாட்டரங்கில் தடகள பயிற்சி எடுத்துக்கொள்ளும் நாரணம்மாள்புரம் செயின்ட் ஜோசப் பள்ளி மாணவிகள்.



தடகளபயிற்றுனர் பிராங் பால் ஜெயசீலன்.

2 மாணவிகள் அகாதெமி தேர்வில் செலக்ட் செய்யப்பட்டு அரசு பயிற்சி முகாம்களுக்கு சென்னைக்கும், திருவண்ணாமலைக்கும் சிறப்பு பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இதனை பார்த்த பாளை அண்ணா விளையாட்டரங்க தடகள பயிற்றுநர் பிராங் பால் ஜெயசீலன் நாரணம்மாள்புரத்திற்கு நேரில் சென்று மாணவிகளின் உடல் திறனை பரிசோதித்து அவர்கள் மாநில அளவில் சாதனை படைக்க தகுதியானவர்கள் என கண்டறிந்து அவர்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள், உடை மற்றும் தடகள ஷூக்களை தனது சொந்த செலவிலும் நண்பர்கள் மூலமாகவும் வழங்கினார்.

இந்த ஆண்டு விளையாட்டுக்களில் பங்கேற்க ஆர்வம் காட்டும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது. 2009-2010 கல்வியாண்டில் நெல்லையில் நடந்த மினி மாரத்தான் போட்டியில் 5 கிலோமீட்டர் தூரத்தில் முதல் மூன்று இடங்களையும், 10 கிமீட்டர் தூரத்தில் முதல் இரண்டு இடங்களையும் இப்பள்ளி மாணவிகள் பிடித்தனர். மார்ச் மாதம் சென்னையில் நடந்த மாநில அளவிலான 10கிமீட்டர் மாரத்தான் போட்டியில் 6வது இடத்தை பிடித்தார் இப்பள்ளி மாணவி சுப்புலெஷ்மி. மேலும் இந்த ஆண்டு மாவட்ட அளவில் நடந்த உலகத்திறனாய்வு தடகள போட்டிகளில் 23 இடங்களையும், 9 கல்வி மாவட்டங்களுக்கிடையே நடந்த தடகள போட்டிகளில் 9 இடங்களையும் பெற்றுள்ளனர். இது தவிர அகாதெமி செலக்‌ஷனுக்கும் 6 பேர் தேர்வாகியுள்ளனர் எனபதும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து உடற்கல்வி ஆசிரியர் சுந்தரமூர்த்தி கூறியதாவது:



உடற்கல்வி ஆசிரியர் சுந்தரமூர்த்தி.

இந்த சாதனைகளை படைப்பதற்கு மாணவிகளின் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமே காரணம். பள்ளி தவிர விடுமுறை நாட்களில் வெறும் பழைய சாதத்தை உண்டுவிட்டு காலை 5 மணிக்கு சைக்கிளில் 10 மைல் தொலைவு பாளை அண்ணா விளையாட்டரங்கிற்கு மாணவ, மாணவிகள் பயிற்சிக்கு வருகிறார்கள். இவர்களது பெற்றோர் பெரும்பாலானோர் விவசாயக் கூலி வேலை செய்பவர்கள். 9ம் வகுப்பு பயிலும் மீனாவின் தந்தை பெட்டிக் கடை வைத்திருக்கிறார். மீனா கடையிலும் வியாபாரத்தை கவனித்துக் கொண்டு பள்ளிக்கு வந்து பயிற்சியும் எடுத்துக்கொள்கிறார்.

சென்னை மாரத்தான் போட்டியில் 6வது இடத்தை பிடித்த சுப்புலெட்சுமியின் தந்தை சலவைத் தொழிலாளி. பள்ளியில் பயிற்சிக்காக 70X40 அளவுடைய மைதானம் மட்டுமே உள்ளது. பள்ளி தலைமையாசிரியர் அந்தோணிசாமி மாணவிகளுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்து வருகிறார். மாணவ, மாணவிகளின் வறுமையை அறிந்து விளையாட்டு ஆர்வலர்கள் பலர் உதவி வருகின்றனர். ஆனால் அரசு உதவி கிடைத்தால் மட்டுமே மாநில அளவில் மேலும் சாதனைகளை ஏற்படுத்த முடியும். இன்னும் 5 வருடத்தில் இப்பள்ளி மாணவ, மாணவிகள் அகில இந்திய அளவில் சாதனை படைப்பார்கள் என்றார்.